


**31. 10. 2025**

<u>தலைப்புச்செய்திகள்</u>

1. ஒருங்கிணைந்த இந்தியா என்ற சர்தார் வல்லபாய் பட்டேலின் கனவை நனவாக்க அனைவரும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற பிரதமர் திரு.நரேந்திரமோடி அழைப்பு விடுத்துள்ளார்.

2. பட்டேலின் 150ஆவது பிறந்த தினத்தை ஒட்டி நாடுமுழுவதும் ஒற்றுமை ஓட்டங்களில் ஏராளமானோர் இன்று பங்கேற்றனர்.

3. மறைமலை நகரில் நவீன வாகன எஞ்சின் உற்பத்தி மையத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழக அரசு மற்றும் ஃபோர்ட் நிறுவனத்திற்கு இடையே இன்று கையெழுத்தானது.

4. தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் கட்டுக்குள் உள்ளதாக, மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

5. தஞ்சை பெரியகோவிலில் மாமன்னன் ராஜராஜ சோழனின் ஆயிரத்து 40ஆவது ஆண்டு சதயவிழா கொண்டாட்டங்கள் இன்று தொடங்கியுள்ளன.

<u>இனி விரிவான செய்திகள்</u>

************

## பிரதமர்

வளர்ச்சி அடைந்த பாரத இலக்கை எட்ட நாட்டு மக்கள் ஒருங்கிணைந்து அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

சர்தார் வல்லபாய் பட்டேலின் 150ஆவது பிறந்த தினத்தை ஒட்டி, குஜராத் மாநிலம், ஏக்தா நகரில் நடைபெற்ற விழாவில் இன்று உரையாற்றிய பிரதமர், ஒற்றுமை தின உறுதிமொழியை கோடிக்கணக்கானோர் இன்று ஏற்றிருப்பது, நாட்டின் ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கான அடையாளம் என்றார்.

நாட்டின் நலனுக்கு எதிரான எண்ணங்களை மக்கள் புறந்தள்ள வேண்டும் என்று வலியுறுத்திய அவர், இதுவே தற்போதைய தேவை என்று குறிப்பிட்டார்.

"ஒரே பாரதம் உன்னத பாரதம்" என்ற தொலைநோக்கு பார்வையுடன் சுதந்திரத்திற்கு பின்னர் 550 சமஸ்தானங்களை சர்தார் பட்டேல் ஒருங்கிணைத்து சாதனை படைத்ததாக குறிப்பிட்டார்.

நம் நாட்டின் ஆன்மீக கலாச்சாரத்தை எடுத்துரைத்த பிரதமர் பலதரப்பட்ட மொழிகளுடன் நம் நாடு ஒற்றுமையுடனும், வலுவுடனும் திகழ்வதாக பெருமிதம் தெரிவித்தார்.

அனைத்து மொழிகளையும் பாதுகாத்து, முன்னெடுத்து செல்வதே அரசின் தலையாய பணி என்றும் அவர் குறிப்பிட்டார்.

வலுவான வளர்ச்சி அடைந்த ஒருங்கிணைந்த இந்தியா என்ற சர்தார் பட்டேலின் கனவை நனவாக்க நாம் செயலாற்ற வேண்டும் என்று பிரதமர் கேட்டுக்கொண்டார்.

முன்னதாக ஒற்றுமை சிலைக்கு அஞ்சலி செலுத்திய பிரதமர், ஒற்றுமை தின உறுதிமொழியையும் செய்து வைத்தார்.

எல்லை பாதுகாப்பு படையினர், மத்திய ரிசர்வ் காவல் படையினர், மாநில காவல்படை, தொழில் பாதுகாப்பு படையினரின் அணிவகுப்பு மரியாதையை பிரதமர் ஏற்றுக்கொண்டார்.

இந்திய விமான படையினரின் வீரத்தையும், துணிச்சலையும், பறைசாற்றும் வகையில் மூவர்ண சூரிய கிரண் வான் சாகச அணிவகுப்பையும் பிரதமர் பார்வையிட்டார்.

************

<u>பட்டேல் டெல்லி</u>

புதுதில்லி பட்டேல் சவுக்கில் அமைந்துள்ள சர்தார் பட்டேலின் திருவுருவ சிலைக்கு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று மலரஞ்சலி செலுத்தியதோடு தேச ஒற்றுமை தின வாழ்த்துக்களை நாட்டு மக்களுக்கு தெரிவித்துக்கொண்டார்.

தேசத்தை ஜனநாயக குடியரசாக ஒருங்கிணைத்தவர், சர்தார் வல்லபாய் பட்டேல் என்று, குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் புகழஞ்சலி செலுத்தினார்.

உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தேச ஒற்றுமை தின ஓட்டத்தை டெல்லி மேஜர் தியான்சந்த் விளையாட்டரங்கில் துவக்கிவைத்தார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் விடுத்த செய்தியில், தேசத்தை கட்டி எழுப்ப சர்தார் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது என்று குறிப்பிட்டுள்ளார்.

************

ஒற்றுமை ஓட்டம்

நாடுமுழுவதும் முதற்கட்ட ஒற்றுமை ஓட்டம் இன்று தொடங்கி அடுத்த மாதம் 25ஆம் தேதிவரை நடைபெறும் நிலையில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் முனைப்புடன் ஒற்றுமை ஓட்டங்கள் நடைபெற்றன.

திருவள்ளுர் மாவட்டம் ஆவடியில் காவலர்கள் பங்கேற்ற மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது.

இந்த ஓட்டத்தில் பங்கேற்றது உத்வேகம் அளிப்பதாக காவலர்கள் தெரிவித்தனர்.

வாய்ஸ்

சேலம் ரயில்வே கோட்டம் சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில், சாரணியர் இயக்க மாணாக்கர், ரயில்வே பாதுகாப்பு படை, காவல் துறையினர் பங்கேற்றனர்.

கிருஷ்ணகிரியில் நடைபெற்ற ஒற்றுமை பாதயாத்திரையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணாக்கர் பங்கேற்றதோடு, சர்தார் வல்லபாய் பட்டேலின் புகைப்படத்திற்கு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

************

ராஜ்நாத்சிங்

பாதுகாப்பு, ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தத்தில் இந்தியாவும் அமெரிக்காவும் இன்று கையெழுத்திட்டன.

அடுத்த 10 ஆண்டில் ராணுவ ஒத்துழைப்பிற்கு இந்த ஒப்பந்தம் வகை செய்வதாகவும், இதன்மூலம் இருநாடுகளுக்கிடையே வலுவான பங்களிப்பிற்கு வழிகோலப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தமது சமூக வலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. பெட்டே ஹெக்ஸத் உடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் இந்த

ஒப்பந்தம் எட்டப்பட்டதாக திரு.ராஜ்நாத்சிங் குறிப்பிட்டார்.

இந்தோ பசிஃபிக் பிராந்தியத்தில் தடையற்ற வர்த்தகத்திற்கு இது இன்றியமையாதது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இருநாடுகளுக்கிடையிலான அரசியல் உறவுகள் வளர்ச்சி மேம்படுவதுடன் ஒத்துழைப்பிலும் புதிய அத்யாயம் தொடங்கியுள்ளதை இந்த ஒப்பந்தம் பறைசாற்றுவதாக திரு.ராஜ்நாத்சிங் குறிப்பிட்டார்.

************

<u>ஜல்ஜீவன்</u>

நாடுமுழுவதும் கிராமப்புற குடிநீர் சேவையை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் பங்கேற்ற சிறப்பு காணொலி கூட்டம் இன்று நடைபெற்றது.

ஜல் சக்தி அமைச்சகத்தின் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் துறை சார்பிலான இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர்கள், குடிநீர் விநியோக இயக்கத்தின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய ஜல்ஜீவன் இயக்கத்தின் இயக்குனர் திரு.கமல் கிஷோர் கிராமப்புற குடிநீர் இயக்கங்களை சிறப்பாக முன்னெடுத்து சென்ற மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு பாராட்டு தெரிவித்தார்.

உள்ளுர் ஆளுமை, மின்னனு கண்காணிப்பு, போன்றவற்றை வலுப்படுத்தி, சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்தியதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

குடி நீர் பற்றாக்குறைக்கான நீண்டகால தீர்வுகள் ஊரக இந்தியாவின் குடிநீர் சேவையை நிரந்தரமாக வலுப்படுத்துவதன் வழிமுறைகள் குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டது.

************

ஒப்பந்தம்

செங்கல்பட்டு மாவட்டம் மறைமலை நகரில் அடுத்த தலைமுறை வாகன எஞ்சின் உற்பத்தி மையத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழக அரசு ஃபோர்ட் நிறுவனம் இடையே இன்று கையெழுத்தானது.

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தான இந்த ஒப்பந்தத்தால் 600 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3 ஆயிரத்து 250 கோடி ரூபாய் முதலீட்டில் இந்த வாகன எஞ்சின் உற்பத்தி மையம் அமைய உள்ளது.

முதலைமைச்சரின் அமெரிக்க பயணத்தின்போது ஃபோர்டு நிறுவனம் உறுதியளித்தபடி இந்த திட்டம் மீண்டும் தொடங்கப்பட உள்ளது.

மாநில தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி.ராஜா உள்ளிட்டோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

************

மா.சுப்பிரமணியன்

தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் கட்டுக்குள் உள்ளதாக, மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் வடகிழக்கு பருவமழை சுகாதார நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் இன்று பேசிய அவர், 4 ஆயிரத்து 755 டெங்கு கண்டறியும் ஆய்வகங்களில் இந்தாண்டு, 2 லட்சம் மாதிரிகள் பரிசோதிக்கப்ப்டதாக தெரிவித்தார்.

வடகிழக்கு பருவமழை தொடங்கி 15 நாட்களில், 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறப்பு மருத்துவ முகாம்கள் மூலம், 6 லட்சம் பேர் பயனடைந்ததாகவும் கூறினார்.

25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் கொசு ஒழிப்பு பணிகளில் ஈடுபடுவதாக அவர் தெரிவித்தார்.

மாநிலம் முழுவதும் 2 ஆயிரத்து 39 சுகாதார நிலையங்களில் நாய் மற்றும் பாம்புக்கடிக்கு மருந்துகள் இருப்பில் உள்ளதாகவும் திரு.மா.சுப்பிரமணியன் கூறினார்.

************

திண்டுக்கல்:

திண்டுக்கல் மாவட்டத்தில் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தப் பட்டியல் தயாரிக்கும் பணிகள் வரும் 4ம் தேதி தொடங்க உள்ள நிலையில் 17, 18 வயது பூர்த்தியடைந்தவர்களை வாக்காளர்களாக இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று ஆட்சித்தலைவர் திரு.சரவணன் தெரிவித்துள்ளார்.

- - வாய்ஸ் - -

************

அன்பில்

திருச்சி டி.வி.எஸ்.டோல்கேட் பகுதியில் 290 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் நூலக அறிவுசார் மைய கட்டிட பணிகளை மாநில பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில மகேஷ் பொய்யாமொழி இன்று ஆய்வு செய்தார்.

பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அதிகாரிகளை அவர் அறிவுறுத்தினார்.

************

எடப்பாடி

சேலம் மாவட்டம் ஓமலூரில் அஇஅதிமுக நிர்வாகிகளுடன் கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

தமிழ்நாட்டில் வரும் சட்டமன்ற தேர்தல் பணிகளை மேற்கொள்வது, கட்சியின் வளர்ச்சி பணிகள் குறித்து அவர் கலந்தாலோசித்தார்.

************

<u>சதயவிழா</u>

தஞ்சை பெரியகோவிலில் மாமன்னன் ராஜராஜ சோழனின் ஆயிரத்து 40ஆம் ஆண்டு சதயவிழா இன்று தொடங்கின.

இரண்டு நாட்கள் நடைபெறும் இவ்விழாவில் கருத்தரங்கம், கவியரங்கம், கலைநிகழ்ச்சிகள் இடம்பெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

<u>சேலம்</u>

சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற கலைத்திருவிழாவில் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர், தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.

இந்நிகழ்ச்சி தங்களுக்கு பெரிதும் உத்வேகம் அளித்ததாக மாணாக்கர் தெரிவிக்கின்றனர்.

************

<u>கிரிக்கெட்</u>

மெல்பர்னில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான 2ஆவது 20-20 கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்யும் இந்தியா சற்றுமுன் 1 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 1 ரன் எடுத்திருந்தது.

டாஸ் வென்ற ஆஸ்திரேலியா முதலில் பந்து வீச தீர்மானித்தது.

************